இருக்கின்றவர்கள் மேம்பாடு அடைய வேண்டுமானால், சர்க்கார் செலவில் சகலரும் படிக்க வேண்டும். அந்த முறையில் கல்வி முறை மாற்றி அமைக்கப் படவேண்டும்.

மேலும் பூண்டி வாண்டையார் கிராமத்தில் தகராறு நடந்திருக்கிறது. அம்பலக்காரர், அரிசனங்கள் விஷயத்தில் போலீஸ் தலையிட்டிருக்கிறது. அங்குள்ள எஸ்.ஐ. வேதய்யன் என்பவர் தாறுமாறான முறையில் பேசியதாகக் கேள்விப்படுகிறோம். பூண்டி வாண்டையார் குடும்பத்தில் உள்ளவர்கள் கீழ் வெண்மணியில் எப்படி வீட்டில் வைத்துக் கொளுத்தினார்களோ, அப்படி நாங்கள் மரத்தில் வைத்துக் கொளுத்துவோம் என்று சபதம் பூண்டிருக்கிறார்களாம். அந்த மாதிரி இடங்களில் சர்க்கார் பாதுகாப்பில்லை. அப்படி கொளுத்துகிற இடம் தான் அவைகள். பின் தங்கிய ஏரியா. அமைச்சர்கள் தலையிட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அதைப் புனர் பரிசீலனை பண்ண வேண்டும்.

ஓலப்பாடி என்ற பகுதியில் கன்னையன் என்ற அரிசனனை குளத்தில் வெட்டிக் கொன்றார்கள். அவர் அண்ணா தி.மு. கழகம் என்று சொன்னார்கள். வழக்குப் போடுவதற்கு முன்பு தி.மு. கழகம் என்று சொன்னார்கள். ஆனால் அதில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்வதற்கு ஒரு வருஷம் ஆகி விட்டது. அரிசனங்கள் சம்பந்தப்பட்ட அவர்கள் கொடுக்கின்ற வழக்குகளை நியாயமாகப் பரிசீலனை செய்யவில்லை என்றால் சரியான முறையாகாது. எங்களுக்குச் சொந்தம் பந்தம் மேலிடத்தில் யார் இருக்கிறார்கள்? அந்த அளவுக்கு வளர்ச்சி அடையவில்லை. ஆகவே நீதி இலாக்கா, நிர்வாக இலாக்கா சரியாக இயங்கினால் தான் எங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

4. அமைச்சரின் அறிக்கைகள்

(அ) வறட்சி நிவாரணப் பணிகளுக்காக செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது பேரவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக வறட்சி நிவாரணத்திற்கென்று 1974-75 நிதி ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 10 கோடி. இதில் 31—3—1975 முடிய, செலவழிக்கப்பட்ட

தொகை சுமார் ரூபாய் 8 கோடியே 70 லட்சமாகும். தொடர்ந்து வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெற்று வருவதாலும், ஏற்கனவே எடுத்துக் கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் துரிதமாக தொடர்ந்து நடைபெறவும், நடப்பு ஆண்டில் (1975-76), திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக வறட்சிப் பணிகளுக்கென்று நிதி நிலை அறிக்கையில் கண்டிட்டுக் காட்டிய ரூபாய் 20 கோடியில் முதற் கட்டமாக இப் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு ரூபாய் 6 கோடியே 30 லட்சம் அரசு ஒதுக்கீடு செய்து இன்று ஆணை பிறப்பிக்கின்றது என்பதைத் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு திட்டத்திற்கு அப்பாற்பட்ட வறட்சி நிவாரணப் பணிகளோடு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணிகளும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(3) 1975-76-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

(அ) நிதிக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள் அரிசனங்கள் முதியோர் நலன்—தொடர்ச்சி

திரு. சி. பாண்டுரங்கன் : இன்று விவாதத்தில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் அரிசனங்கள், மற்றும் மலைவாழ் ஜாதியினர் மானியத்தின் மீது என் கருத்துக்கள் சிலவற்றை அறிவிக்க விரும்புகிறேன்.

இந்த அரிசனங்கள் என்று சொல்லும்போது அரிசனங்கள் என்பது இடையில் வந்த பெயராகும். அதாவது ஆதித் திராவிடர்கள், பழங் குடிமக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் என்பது தான், அவர்களுக்கு முதன்மையாக இருந்தது. இந்த அரிசனங்கள் மீது, தாழ்த்தப்பட்ட மக்கள் மீது மிகவும் பேரன்பு கொண்டு, அவர்களுக்காகக் கண்ணீர் வடித்த தேசப் பிதா மகாத்மா காந்தி அவர்கள், இந்த அரிசனங்களை யாருமே கைதூக்கி விட முடியாது, யாராலும் காப்பாற்ற முடியாது என்பதை அறிந்து அவர்களை அரிசனங்கள், கடவுளின் பிள்ளைகள் என்று விட்டு விட்டார். இவர்களை மனிதர்கள் காப்பாற்ற முடியாது, கடவுள் தான் காப்பாற்ற வேண்டுமென்ற நிலைமையில் தான் அப்படிச் சொன்னாரோ என்று நாம் வியக்க வேண்டியிருக்கிறது.

ஏனென்றால் சுதந்திரம் 1947-ல் வாங்கினோம். இப்பொழுது 1975-ம் வருடம். இன்று வரை சுதந்திர விழா கொண்டாடுகிறோம். அரிசன விழாவும் கொண்டாடுகிறோம். இதற்கு முடிவே இல்லையா என்று நினைத்து வேதனைப்படு-